

# கலைஞர்... காலக் கணிதர்!

■ நீரை.மகேந்திரன்

சமீபத்தில் ஒரு காணொலி பார்த்தேன். பேராசிரியர் ஜெயரஞ்சன் அதில் பேசினார். தமிழ்நாட்டின் தொழில் கட்டமைப்புகள் வளர்ந்த விதம் பற்றியும், அதில் கலைஞரின் முன் முயற்சிகளையும் எடுத்து வைத்தார்.

1970 ஆண்டுகளில் ஓசூர் நகரத்தை தொழில்மயமாக்க முடிவு செய்கிறார் கலைஞர். தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை, திருநெல்வேலி என மையமான நகரங்கள் இருக்க, ஏன் மாநில எல்லையில் இருக்கும் ஓசூரைத் தேர்வு செய்தார் எனக் கேள்வி எழுப்பி விடை அளிக்கிறார். அதில், பெங்களூர் நகரம் வளர்ந்தால், தமிழ்நாட்டு எல்லையில் மிகப்பெரிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் என்கிற தொலைநோக்குச் சிந்தனையே காரணம் என்கிறார். உண்மைதான்.

ஓசூர் தொழிற்பேட்டையைப் போல ஏராளமான முன் முயற்சிகள் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அந்தத் தொலைநோக்கை விரிவான பொருளில் சொல்ல வேண்டும் எனில், காலக் கணிதராக அவரை முன்னிறுத்த முடியும்.

## சென்னை நகர்

அவர் உருவாக்கியுள்ள அத்தனை கட்டமைப்புகளிலும் இந்தக் காலக் கணிதத்தைக் கவனிக்க முடியும். உதாரணமாக சென்னை மாநகர வளர்ச்சியை 70 களில் துல்லியமாகக் கணித்தவர் கலைஞர்தான்.

நகரின் மையப் பகுதியாக அமைந்திருக்கும் அண்ணா மேம்பாலத்தைத் திட்டமிட்டது மட்டுமல்ல, இப்போது நகரத்தின் மிக முக்கிய மக்கள் குடியிருப்புகளாகத் திகழும் 'கலைஞர் நகர்' 'அண்ணா நகர்' ஆகியவற்றின் உருவாக்கத்திலும் கலைஞரின் காலக் கணக்கினை விளங்கிக் கொள்ளலாம்.

## சாலையும் கார்களும்

1967 அவர் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோதுதான் ஆலந்தூர் - கத்திபாரா- அசோக் நகர்- வடபழனி -அண்ணாநகர் -அம்பத்தூர் வழியாக ஆவடியை இணைக்கும் உள் வட்ட சாலை திட்டமிடப்பட்டது. தாம்பரம் -போரூர் -மதுரவாயல் -செங்குன்றம் வழியாக சென்னை புறவழிச் சாலையையும் திட்டமிட்டவர் இந்தக் கணிதர்தான். அன்று சென்னையின் மக்கள் தொகை தோராயமாக 25 லட்சம் இருக்கும்போது, அதன் ஐந்து மடங்கு அளவுக்கு அவர் விரிவாக்கத்தை முன் கணிக்கிறார்.

சென்னை நகர் வளர்ச்சிக்காக உலக வங்கி நிதியுதவி அளிக்கத் தொடங்கிய காலத்தில், அவர் ஆட்சியில் இல்லை என்பது கெடு வாய்ப்பு . 1980-88 ஆம் ஆண்டுகளில் அந்தத் திட்டம் இரண்டு கட்டமாகவும், மூன்றாவது திட்டம் 1988-97 வரையிலும் செயல்படுத்தப்பட்டது.

இந்தக் காலகட்டங்களில் இரண்டு ஆண்டுகள்தான் கழக ஆட்சி. ஆனால், அவர் ஆட்சியில் இருந்திருந்தால் இன்றைய ஆட்சியில் முன்னெடுத்துக் கொண்டிருக்கும் மழைநீர் வடிகால் அமைப்புகளுக்கான நெடுநாள் திட்டம் அன்று நிகழ்ந்திருக்கும்.

> அவரின் காலக்கணிதம் ஆட்சிப்பணி, அரசியல் பணியில் மட்டுமல்ல. அல்லது கடந்த 50 ஆண்டுத் தேர்தலை மட்டும் கணித்துத் திட்டமிட்டதில்லை. அவர் காலக் கணிதர் என்பதை அவரது தொடக்க கால அரசியல் வாழ்க்கையிலிருந்து தொடங்கலாம்.

மிகச் சமீபத்தில் சென்னையில் சர்வதேச பந்தய கார் போட்டி நடைபெறுவதாக இருந்தது. அதை ஏன் சென்னையில் நடத்த வேண்டும் எனச் சிலர் விமர்சனத்தை எழுப்பினர். ஆமாம், ஏன் சென்னையில் நடக்க வேண்டும்? வேறு நகரங்களில் நடத்தப்பட்டால், என்ன என்கிற கேள்வி எழுப்பினால், அதற்கும் கலைஞர் என்கிற காலக் கணிதரைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கும்.

1986 ஆம் ஆண்டில் டெல்லியில் ஒரு கார் கண்காட்சி நடைபெற்றது. அதற்கு முன்பு வரை இந்தியாவில் சொகுசு கார்களுக்கான தயாரிப்பு கிடையாது. 'அம்பாசிடர்', 'பத்மினி' போன்ற கார்கள்தான். அந்தக் கண்காட்சிதான் இந்தியாவில் நவீன வாகனங்களுக்கான வாசலைத் திறந்து வைத்தது எனலாம்.

கார் உற்பத்தி உரிமை எளிதாக்கபட்டதும், இந்தியாவில் முதன்முதலில் அடி எடுத்து வைத்த ஹூண்டாய், ஃபோர்டு நிறுவனங்கள் தொழில் தொடங்கத் தேர்வு செய்த மாநிலம் தமிழ்நாடு. அழைத்து வந்தவர் காலக் கணிதர் கலைஞர். டெல்லி நவீன வாகனக் கண்காட்சிக்குப் பின்னர், கலைஞர் 'டைம் டிராவல் ' செய்கிறார்.

இன்று பல்லாயிரம் இளைஞர்களுக்கு அந்தத் தொழிலில் வேலை கிடைத்துள்ளது. பெரு நிறுவனங்களைச் சார்ந்த சிறு நிறுவனங்கள், வசதி கொண்டோருக்கு வாகனங்கள் என அந்தத் துறை தமிழ்நாட்டில் அழுத்தமாகக் கால் பதித்துள்ளது. இன்று இந்தியாவின் கார் உற்பத்தியில் 31 சதவிகித பங்களிப்பைக் கொண்டுள்ளது தமிழ்நாடு. 140 கோடி மக்கள்தொகை கொண்ட நாட்டில், கார் உற்பத்தியில் 31 சதவிகிதம் வைத்துள்ள ஒரு மாநிலத்தில் பந்தயகார் தொடர்பான ஒரு சர்வதேச போட்டி நடப்பதில் வியப்பென்ன? என ஒரு நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

## பாதிப்பில்லாத நாட்கள்

சில மாதங்களுக்கு முன்னர் பேராசிரியர் நாகநாதனுடன் ஓர் உரையாடலின் பொழுது அவர் குறிப்பிட்டார். 2019 -20 ஆம் ஆண்டுகளில் கொரோனா ஊர் முடக்கம் , வேலையிழப்புகள் நிகழ்ந்த போது, பல மாநிலங்களிலும் மக்களின் தனிநபர் வருமானத்தில் மிகப்பெரிய சிக்கல் உருவானது. ஆனால், தமிழ்நாட்டில் அப்படியான சிக்கல் பெரிய பாதிப்பினை ஏற்படுத்தவில்லை. ஏனென்றால், தமிழ்நாட்டில் குடும்பத்துக்கு ஒருவர் தொழில்நுட்பம் தொடர்பான வேலைகளைச் செய்து வருகின்றனர். அவர்களுக்கு வீட்டிலிருந்தபடியே வேலை செய்யலாம் என்கிற வசதி இருந்தது. அதனால் வருமான இழப்பு இல்லை . அதனால் தமிழ்நாடு தப்பித்தது. இதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பு அடிப்படை வித்திட்டவர் காலக் கணிதர் கலைஞர்.

1970 ஆம் ஆண்டுகளிலேயே கணினி அறிவியல், தொழில்நுட்பவியல் ஆகிய துறைகளில் கலைஞர் கொண்டு வந்த பாடத்திட்டமும் அவற்றைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்கிற கணிப்பும்தான். பிற்காலத்தில் செயலிகள் மூலம் உலக நடப்புகளை அறியலாம் என்கிற சூழல் வரும் பொழுது முயற்சித்துப் பார்த்தவராக கலைஞரைப் பார்க்கலாம். இப்படியாக கலைஞர் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்னர் எதிர்வரும் காலத்தைக் கணித்து அதற்கேற்பத் திட்டமிடுவதும் செயலாற்றுவதும் உருவாக்குவதும் செய்தபடி இருந்ததைக் கவனிக்க முடியும்.

அவரின் காலக்கணிதம் ஆட்சிப்பணி, அரசியல் பணியில் மட்டுமல்ல. அல்லது கடந்த 50 ஆண்டுத் தேர்தலை மட்டும் கணித்துத் திட்டமிட்டதில்லை. அவர் காலக் கணிதர் என்பதை அவரது தொடக்க கால அரசியல் வாழ்க்கையிலிருந்து தொடங்கலாம்.

---

## திராவிட இயக்க இதழ்கள் - 'தென்னகம்'




திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆரம்ப கால தலைவர்களில் ஒருவரான கே.ஏ.மதியழகன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இதழ் இது. 1959-ஆம் ஆண்டு ஜனவரி 16 முதல் வெளிவந்தது. 70-கள் வரை வெளிவந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

எட்டு பக்க இதழில், அட்டைப்படப் பக்கத்தில் இருந்தே படைப்புகள் வெளியாகிவிடுகின்றன. தலையங்கம், தொடர் கட்டுரைகள், திரை விமர்சனம், கவிதை ஆகியவை வெளிவந்துள்ளன.

இந்த இதழில்தான் 'என் தம்பி தருகின்றான் எழிலார் ஏடு!

'தென்னகம்' என்னும் ஓர் தீந்தமிழ் ஏடிது...' என்று தொடங்கும் பேரறிஞர் அண்ணாவின் இறுதிக் கவிதை 1968 ஜனவரி 16 தேதியிட்ட இதழில் வெளிவந்தது.

## :.ப்ளாஷ்பேக்





வள்ளிக்கண்ணு

### மீண்டும் சந்திப்போம்!

1986-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ஆம் தேதி, குற்றாலத்தில் தலைவர் கலைஞர் கதை, வசனத்தில், எங்கள் ஊர் தயாரிப்பாளர் சூரிய நாராயணன் தயாரிக்க, நமது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் நடித்த திரைப்படமான 'ஒரே ரத்தம்' படப்பிடிப்பின் போது சந்தித்து புகைப்படம் மற்றும் கையொப்பம் பெற்றுக் கொண்டேன். அப்போது அவர் 'உலகம் உருண்டை, மீண்டும் சந்திப்போம்!' என்று குறிப்பிட்டு கையொப்ப மிட்டார். வைகோ அவர்களும் அப்போது உடனிருந்தார்.

**-வள்ளிக்கண்ணு,**
**மேலப்பாளையம்,**
**திருநெல்வேலி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### இந்தியாவில் முதல் கட்சி!

**1967 ஆம் ஆண்டு இந்தியாவில் எந்த மாநிலத்திலும், மாநில அளவிலான தேர்தல்களில் மாநிலக் கட்சிகள் தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதில்லை. முதல் கட்சியாக தி.மு.க. தமிழ்நாட்டில் அதை செய்தது. பிறகு ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில கட்சிகள் ஆட்சியில் அமர்ந்தன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 366




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131